# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 249/2020 and 1/2024

Deposition of witness for the Plaintiff/PW3
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 29-11-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : C.Ramesh | Village | : |
| Father's Name | : C.Mohan | Taluk | : |
| Age | : | Calling | : |

முதல் விசாரணை

நான் மீனாட்சியம்மாள் டென்டல் காலேஜ்–ல் **Administative officer** வேலை பார்த்து வருகிறேன. என்னுடைய அடையாள அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வழக்கு விபத்தில் இருந்து போன விவேக் 2018 லிருந்து எங்கள் கல்லூரியில் **dental technichian** ஆக வேலை பார்த்து வந்தார். அவரது நியமன கடிதத்தின் நகல் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவரது 2020 ஆம் ஜுலை மாத சம்பள பில் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவரது 2020 ஆம் ஆகஸ்டு மாத சம்பள பில் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவரது 2020 ஆம் செப்டம்பர் மாத சம்பள பில் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவரது 2020 ஆம் அக்டோபர் மாத சம்பள பில் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவரது 2020 ஆம் நவம்பர் மாத சம்பள பில் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவரது ஜனவரி 2020 முதல் நவம்பர் 2020 வரையிலான வருகை பதிவேட்டின் நகல் தாக்கல் செய்கிறேன. (அது ம.த,சா.35 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) சம்பள சான்றிதழ்களின் படி அவரது மாத சம்பளம் ரூ.16,000 . அவரது கல்வி தகுதி டென்டல் டெக்னீசியன் பட்டய படிப்பு படித்துள்ளார். அவரது மாத சம்பளம் அவரது வங்கி கணக்கில் செலுத்தப்படும். அவர் எங்கள் கல்லூரியில் நிரந்தர முழுநேரப் பணியாளராக பணியாற்றி வந்தார். மூப்பின் அடிப்படையில் அவருக்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ம.த.சா. 29 முதல் 35 வரையிலான ஆவணங்கள் எங்கள் கல்லூரியில் கணினியிலிருந்து

பிரிண்ட் எடுத்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.த.சா.29 ல் அவர் நிரந்தர முழுநேர பணியாளர் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவரது சம்பளத்தை அவரது வங்கி கணக்கில் செலுத்துவது சம்மந்தமான எங்கள் கல்லூரி வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவரது வருமான வரி கணக்கு விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர்களுக்கு அதிக நஷ்யீடு கிடைக்க வேண்டும் என்பதன் காரணத்திற்காக அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆவணங்களை உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.)